| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023.07.24 |

## வெளிநாட்டுச் செலாவணி வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது விதிக்கப்பட்ட சில வரையறைகளை/இடைநிறுத்தல்களை தளர்த்தி வழங்கப்பட்ட புதிய கட்டளை

செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினைக் குறைத்து நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமையினைப் பேணிக்காப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்கு உதவியளித்து பேணும் நோக்குடன் கௌரவ நிதி அமைச்சர் சில வெளிமுகப் பணவனுப்பல்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு/மட்டுப்படுத்துதவற்கு 2020.04.02ஆம் திகதி தொடக்கம் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் (வெளிநாட்டு செலாவணிச் சட்டம்) 22ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளை வழங்கியுள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தற்போதைய அத்துடன் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டும், சர்வதேச கொடுக்கல்வாங்கல்களை மேலும் வசதிப்படுத்தும் நோக்குடனும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் பரிந்துரையுடனும் அமைச்சரவையின் ஒப்புதலுடனும் கௌரவ நிதி அமைச்சர் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளையொன்றினை வழங்கியுள்ளார். இக்கட்டளையானது மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான சில வரையறைகளை தளர்த்தியுள்ளதுடன் புலம்பெயர்ந்தவர்களின் நடைமுறை மாற்றல்கள் மீதான மட்டுப்பாடுகளை அகற்றியுள்ள அதேவேளை முன்னைய கட்டளையின் கீழ் விதிக்கப்பட்டிருந்த வேறு இடைநிறுத்தல்கள்/ வரையறைகள் தொடர்ந்தும் அமுலிலிருக்கும். புதிய கட்டளையானது 2023.06.28 தொடக்கம் ஆறு (06) மாதங்களுக்கு வலுவிலிருக்கும். அவ்வாறு தளர்த்தப்பட்ட இடைநிறுத்தல்களின்/வரையறைகளின் தொகுப்பு கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தொ. இல. | விடயப் பரப்பு | முன்னைய கட்டளையின் கீழான வரையறை | புதிய கட்டளையின் கீழான வரையறை |
|---|---|---|---|
| 1 | முதற்தடவை புலம்பெயர் கொடுப்பனவுக் கோரிக்கை | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 வரை* | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 50,000 வரை* |
| 2 | புலம்பெயர் கொடுப்பனவின் ஆரம்பக் கோரிக்கையின் பின்னர் தொடர்ந்துவருகின்ற கோரிக்கைகள் | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 வரை* | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரை* |
| 3 | புலம்பெயர்ந்தவர்களின் நடப்பு வருமானத்தை அல்லது ஒன்றுதிரண்ட நடப்பு வருமானத்தை நாட்டிற்கு அனுப்புதல் | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 வரை* | வரையறை அகற்றப்பட்டுள்ளது |

| தொ. இல. | விடயப் பரப்பு | முன்னைய கட்டளையின் கீழான வரையறை | புதிய கட்டளையின் கீழான வரையறை |
|---|---|---|---|
| 4 | தகைமையுடைய வதிகின்ற முதலீட்டாளர்கள் மூலம் வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக வெளிநாடுகளில் முதலீடுகள்:<br>i. முதலீட்டைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கத்திற்காக ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட கிளை நிறுவனங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மேலதிக முதலீடு | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 வரை* | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 வரை*. |
| | ii. வெளிநாடுகளிலுள்ள அவற்றின் மையத்தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியில் கம்பனியொன்றின் சாதாரண பங்குகளில் முதலீடு | இடைநிறுத்தப்பட்டது | அ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் - ஐ.அ.டொலர் 200,000 கொண்ட வரையறை வரை*.<br>ஆ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படாத கம்பனிகள் - ஐ.அ.டொலர் 100,000 கொண்ட வரையறை வரை*. |
| | iii. வெளிநாடுகளில் அலுவலகங்களை நிறுவுதல் | இடைநிறுத்தப்பட்டது | ஐ.அ.டொலர் 100,000 கொண்ட வரையறை வரை*. |
| 5 | வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் | உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரை*. | வெளிநாடுகளில் அவற்றின் மையத் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 100,000 வரை * |
| 6 | ஊழியர் பங்கு சொத்தாண்மைத் திட்டத்தில்/ ஊழியர் பங்கு தெரிவுத் திட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக, வெளிநாட்டு கம்பனிகளின் துணை நிறுவனங்களாகவிருக்கின்ற அல்லது கிளை அலுவலகங்களாகவிருக்கின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் மூலமான வெளிமுகப் பணவனுப்பல்கள் | இடைநிறுத்தப்பட்டது | இடைநிறுத்தல் அகற்றப்பட்டது. |

**அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை*

மேற்குறித்தவை தொடர்பில் மேலதிகத் தகவல்களை www.dfe.lk என்ற வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தினூடாக 2338/40ஆம் இலக்க 2023 யூன் 28ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.